# தமிழ் உரையாடல் உத்திகளைப் பகிர்ந்த ‘அழகே! தமிழே!’

**லாவண்யா வீரராகவன்**

தமிழ் முரசின் மேம்பட்ட மின்னிலக்கத் தளங்கள், கல்வி அமைச்சின் மாணவர் கற்றல் தளத்தில் உள்ள வளங்கள் என, பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடம் தமிழ் உரையாடலை வளர்க்க உதவும் வழிகளையும் உத்திகளையும் பகிரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அர்த்தமுள்ள கற்றல் நடவடிக்கைகள்மூலம் அன்றாட மொழிப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நடைமுறை உத்திகளைப் பெற்றோருடன் பகிரும் ‘தமிழோடு இணைவோம்: அழகே! தமிழே!’ எனும் நிகழ்ச்சி ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.

கடந்த 2017ஆம் ஆண்டுமுதல் தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழுவின் ஏற்பாட்டில் இந்நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.




விளையாட்டின்வழி வாக்கியப் பயிற்சியளிக்கும் ஆசிரியை காயத்ரி.
**படம்: லாவண்யா வீரராகவன்**

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய அரங்கில் சனிக்கிழமை (மார்ச் 7) நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தமிழ் முரசு நாளிதழின் ஆசிரியர் த ராஜசேகர், இணையத்தளம், செயலி, சமூக ஊடகம் உள்ளிட்ட மின்னிலக்க வடிவங்களில் அனைவரிடமும் சென்றுசேர தமிழ் முரசு பயன்படுத்தும் உத்திகளை எடுத்துரைத்தார்.

பாலர் முரசு, மாணவர் முரசு உள்ளிட்டவை மூலம் சுவாரசியமான, இளைய மனங்களைக் கவரும் வகையிலான செய்திகளையும் சமூக நடப்புகளையும் எளிய சொற்களுடன் படைத்து வருவதை அவர் விளக்கினார்.

தொடர்ந்து, தமிழ் முரசில் உள்ள மாணவர்களுக்கான அசைவுக் காணொளிகள் (Animated videos), ஆங்கில-தமிழ்ப்பொருளுடன் புதிய சொற்களைக் கற்றுத்தரும் ‘சொல்லாட்டம்’ எனும் எளிய இணைய விளையாட்டு ஆகியவற்றைத் திறம்படப் பயன்படுத்தி தமிழ் உரையாடலை வளர்க்கும் வழிகள் குறித்தும் பகிர்ந்தார்.

கற்றலுடன் பார்த்தல், கேட்டல், படித்தல் மூலமும் மொழி நம்முடன் தொடர்ந்து இருக்க வேண்டியதன் அவசியத்தையும் அதில் பெற்றோரின் பங்கு இன்னும் அதிகரிக்க வேண்டியதையும் அவர் வலியுறுத்தினார்.

“தமிழ் முரசு பல்வேறு புதிய முன்னெடுப்புகளை மேற்கொண்டாலும் அவற்றைப் பற்றி அனைவர்க்கும் தெரிவிக்க வேண்டியது அவசியம். அவ்வகையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சி முக்கியமானது,” என்றார் திரு ராஜசேகர்.

“செய்திகளைக் கொண்டு சேர்ப்பதைத் தாண்டி, அச்செய்திகள் தமிழைத் தாங்கிச் செல்கின்றன என்பதையும் அறிய வேண்டும். சில சொற்களைப் பெற்றோர்கள் தெரிந்துகொள்ளவும் பிள்ளைகளுக்குச் சொல்லவும் செய்திகள் உதவுகின்றன,” என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், செய்திகளை ஒளி வடிவில் கேட்பது, ஆங்கிலச் சுருக்கத்தை வாசிப்பது எனத் தமிழ் முரசின் அண்மை மேம்பாடுகளைப் பெற்றோரிடம் கொண்டுசேர்த்ததில் மகிழ்ச்சி என்றும் அவர் சொன்னார்.

தொடர்ந்து, கல்வி அமைச்சின் தமிழாசிரியர்கள் தாங்கள் பயன்படுத்தும் உத்திகள் குறித்தும் வளங்கள் குறித்தும் பகிர்ந்துகொண்டனர்.

“ஒரு நாளில் குறைந்தது 5 முதல் 10 நிமிடங்களைத் தமிழ் பேசுவதற்காக ஒதுக்க வேண்டும். பிள்ளைகள் ஆங்கிலத்தில் பதிலளித்தாலும் சினமடையாமல் தமிழ்ச் சொற்களைக் கற்றுத் தருவது அவசியம்,” என்றார் ஆசிரியை அ.காயத்ரி.

பகடை உருட்டி, அதில் வரும் எண்ணுக்குரிய உணர்வுடன் தமிழ் வாக்கியங்கள் சொல்வது, திறன்பேசியில் வரும் உணர்வுரு (emoji) படங்களைக் கொண்டு கதை உருவாக்குவது எனத் தாம் வகுப்பறையில் பயன்படுத்தும் சுவாரசியமான முறைகளைப் பெற்றோரிடம் அவர் பகிர்ந்துகொண்டார்.

பெற்றோர்க்குத் தேவையான மொழிவளங்களை எடுத்துச் சொல்லும் இந்த நிகழ்ச்சிக்கு கடந்த ஆண்டைவிட இரண்டு மடங்கு அதிக பெற்றோர் பதிவு செய்திருப்பது சமூகத்தின் ஆர்வத்தைக் காட்டுவதாகக் கூறினார் நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவில் பணியாற்றிய வேதநாயகி.

பொதுமக்கள், பள்ளி, சமூக அமைப்புகளின் கூட்டு முயற்சியால் நடைபெறும் இந்த முன்னெடுப்பு, ஓர் ‘அலை விளைவு போல’ (Ripple effect) அனைவரிடமும் சென்று சேர வேண்டும் என்றார் அவர்.

இதில் பங்கேற்ற பெற்றோரான கலைவாணி அருணாசலம், தமக்கு மாணவர் முரசு குறித்துத் தெரிந்திருந்தாலும் செயலி உள்ளிட்ட மின்னிலக்கத் தளங்கள் குறித்து தெரிந்துகொண்டது மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகச் சொன்னார்.

lveer@sph.com.sg


**உமறுப்புலவர் கல்வி உதவி அறங்காவல் நிதி**
**2026 / 2027 கல்விக் கடனுதவி**

சிங்கப்பூர் பல்கலைக் கழகங்களிலும், சிங்கப்பூர் பலதுறைக் கல்லூரிகளிலும் பயிலும், பயிலவுள்ள குறைந்த வருமானம் உடைய குடும்பத்தைச் சேர்ந்த சிங்கப்பூர் குடியுரிமை பெற்ற மாணவர்களுக்கு வட்டியில்லா கல்விக் கடனுதவி வழங்கவுள்ளது. சிங்கப்பூர் ITEல் பயிலும் மாணவர்களும் ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் கல்வி உபகார நிதிக்கு விண்ணப்பிக்கலாம். தமிழை இரண்டாம் மொழியாகப் பயின்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பப் படிவங்களைக் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

**HON SECRETARY**
**UMAR PULAVAR SCHOLARSHIP TRUST FUND**
C/0 BLK 107, Bukit Purmei Road,
#04-45, Singapore 090107
அல்லது அழைக்கவும் **HP: 97853265**

விண்ணப்பிக்க இறுதிநாள்: 9 ஏப்ரல் 2026





**வழக்கறிஞர் ராஜன் சுப்ரமணியம்**
சிங்கப்பூர் சிறைச்சாலை முன்னாள் அதிகாரி
**REGENT LAW LLC (HP: 9828 1711)**
* நோட்டரி / கமிஷனிங் * சமரசம் (Mediation)
* சட்ட ஆலோசனை சேவைகள்

உயில், LPA, குற்ற/ சிவில் வழக்குகள், குடும்ப வழக்குகள், MOM/ICA மேல்முறையீடு, விபத்துகள், கம்பெனி, Probate, வேலையிடப் பிரச்சனைகள், ஒப்பந்தம் & உடன்படிக்கை